[1974 ஏப்ரல் 17

திருப்புவனம்—புல்வாய்க்கரை சாலை.

* 850 வினா—திரு. த. சோணையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் கலியாந்தூர்-திருப்புவனம் சாலையில் திருப்புவனம் புல்வாய்க்கரை ரோட்டில் 1-வது மைல், 2-வது பர்லாங்கிலிருந்து சுமார் 2 பர்லாங் தூரமுள்ள இணைப்புச் சாலை போடுவது குறித்து செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திரு. த. சோணையா : கலியாந்தூர்-திருப்புவனம் சாலை, புல்வாய்க்கரை-திருப்புவனம் ரோடிலிருந்து இரண்டு பர்லாங்கு. அந்த ஊரைச் சுற்றிவருவது என்று சொன்னால் ஐந்து மைல் சுற்றிவர வேண்டியிருக்கிறது. அங்கே 100-க்கு 70 பங்கு அரிசனப் பெருங்குடி மக்கள் வாழ்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய வசதிக்கேற்ப, அவர்களுடைய விவசாயத் தானியங்களைக் கொண்டு வருவதற்கு வசதியாக இருப்பதற்கு, குறுக்கு ரோடாக இரண்டு பர்லாங்குக்கு அரசு போடவேண்டும். ரோடு சிறியதாக இருந்தாலும் பெரும் வசதியை அந்தப் பகுதி மக்கள் அனுபவிப்பார்கள். இனிமேலாவது இதைச் செய்வதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கலியாந்தூர்-திருபுவனம் சாலை கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல குறுகிய சாலையாக உள்ளது என்றாலும், அவர்கள் இப்பொழுது போட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிற அந்தச் சாலை போடுவதற்கு 1.10 ஆவது கிலோ மீட்டர் கலியாந்தூர் சாலையில் 1-2 மைல் சாலை அமைப்பது பற்றிய குறிப்பு பற்றி பரிசீலனை செய்யச் சொல்லி, அந்த சாலை விலைமதிப்புள்ள நஞ்சை நிலங்களுக்கு ஊடே போடப்படவேண்டும். நிலம் இலவசமாகக் கிடைக்குமானால், அந்த சாலை திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய கிராமப் பணித் திட்டத்தின்கீழ், இணைப்புச் சாலை திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் என்று தலைமைப் பொறியாளர் அறிவித்திருக்கிறார். இந்த சாலை அமைப்பதற்குத் தோராயமாக ஏற்படுகின்ற செலவு ரூ. 37,000 ஆகும். இந்த ஆண்டு திட்டத்தில் அது சேர்க்கப்பட வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1974 ஏப்ரல் 17]

திரு. த. சோனையா : திருபுவனம் மைல் ஒன்று இரண்டு பர்லாங்கில் இருக்கிற சுமார் 2 பர்லாங்க் ரோடு போடுவதற்கு ரூ. 37,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அரசாங்கத்திற்கு ரூ. 37,000 என்பது ஒரு பெரிய தொகை அல்ல. அதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிய பலனை அடையப்போகிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்கனவே இருந்த அரசு கொடுத்திருந்த வாக்குறுதி நிறைவேற்றப் படாமல் ஏமாற்றமடைந்திருக்கிற மக்களுக்கு அந்த ஏமாற்றத்தைப் போக்குவதற்கு வேண்டி இந்த அரசு மீண்டும் ஒரு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சாலை அமைப்பதற்கு மட்டும் ரூ. 37,000 என்று சொன்னேன். நில ஆர்ஜிதம் செய்வதற்கு விலை மதிப்புள்ள நிலம் என்று குறிப்பிட்டேன். அதனுடைய கிரயத்தை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். அரசு ஏதோ உறுதி அளித்திருப்பதாகச் சொன்னார்கள். நிச்சயம் அரசு அம்மாதிரி உறுதி அளிக்கவில்லை என்றுதான் தெரியவருகிறது. அங்கத்தினர் அம்மாதிரி உறுதி அளித்திருந்தால் அதற்கு அரசு பொறுப்பு அல்ல.

Power from Maharashtra State

*851 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Maharashtra State has offered to supply power to this State in exchange for yarn from this State to them; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தற்சமயம் இல்லை. ஆனால் சென்ற ஆண்டில் 46.35 லட்சம் யூனிட்கள் வழங்கப்பட்டன.

திரு. நா. வீராசாமி : கடந்த ஆண்டு கொடுத்ததாகச் சொன்னார்கள். இப்பொழுது நம்முடைய நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சமீபத்தில் மகாராஷ்டிரா சென்றிருந்த நேரத்தில் விருந்துக்கு அழைத்து இட்லி எல்லாம் கொடுத்து அரிசி கேட்டதாகச் சொன்னார்கள். அப்பொழுது முதல் அமைச்சர் அதற்குப் பதிலாக